Published in Dinamalar paper on Dec. 6. 2021

# கிரிம்சன் நிறுவனம் சார்பில் நிவாரண உதவி வழங்கல்

கடலூர், டிச. 6–

கடலூர் சிப்காட் கிரிம்சன் நிறுவனம் சார்பில், மழை வெள்ளத்தால் பாதித்த மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

கடலூர் சிப்காட்டில் அமைந்துள்ள கிரிம்சன் ஆர்கானிக் நிறுவனம் மற்றும் பாரிஜாத் நிறுவனம் சார்பில் குடிகாடு, ஈச்சங்காடு மற்றும் சங்கொலிக்குப்பம் கிராமங்களில் மழை வெள்ளத்தால் பாதித்த 1000 குடும்பங்களுக்கு நிவாரண உதவியாக அரிசி வழங்கப்பட்டது.

கிரிம்சன் நிர்வாக இயக்குனர் ரமேஷ் பிரபாகரன் தலைமை தாங்கினார்.



கடலூர் முதுநகர் கிரிம்சன் ஆர்கானிக்ஸ் நிறுவனம் சார்பில் மழை வெள்ளத்தால் பாதித்த சங்கொலிகுப்பம் மக்களுக்கு நிவாரணப் பொருட்களை நிர்வாக இயக்குனர் ரமேஷ் பிரபாகரன் வழங்கினார்.

இயக்குனர் பரணிதரன், குடிகாடு ஊராட்சி தலைவர் தேவி சிவக்குமார், கவுன்சிலர் ஆனந்தன், மாவட்ட கவுன்சிலர் முத்துகிருஷ்ணன், முன்னாள் ஊராட்சி தலைவர் செந்தாமரைக் கண்ணன், நிறுவன மனிதவள மேலாளர் பெனிசன், பி.ஆர்.ஓ., குமார், நிர்வாக இயக்குனரின் நேர்முக உதவியாளர் கோமதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.